இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

மட்டம் - 05

**SNU5336/ESU3136– விசேட தேவைகள் சார் கல்வியின் தத்துவ அடிப்படைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 18.01.2025 — நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி I

1. உள்ளடங்கற் கல்வி நடைமுறைகளில் **மூன்று** (03) வளர்ந்து வரும் எண்ணக்கருக்களைக் கண்டறிந்து, **ஒரு** (01) எண்ணக்கருவை எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாக விளக்குக.
2. உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியர்களுக்குக் கல்வியியல் தத்துவம் இன்றியமையாததாக இருப்பதற்கான **ஐந்து** (05) காரணங்களைப் பட்டியலிடுக.
3. இலங்கைக் கல்வி முறைமையில் இயலாமைகளையுடைய மாணவர்களுக்கான பின்வரும் நடைமுறைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக்களுடன் விவரிக்குக.
   அ. விசேட பாடசாலைகள்
   ஆ. விசேட கல்வி அலகுகள்
   இ. உள்ளடங்கற் கல்வி
4. தொடர்புடைய உதாரணங்களை மேற்கோள் காட்டி பல்வேறு கண்ணோட்டங்களில் (perspectives) கல்வியின் முக்கிய செயல்பாடுகளை விளக்குக.
5. மகாத்மா காந்தியின் கொள்கைகளை இலங்கையில் உள்ள இயலாமைகளையுடைய குழந்தைகளின் கல்வியில் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை எடுத்துக்காட்டுக்களை முன்வைத்து விவரிக்குக.
6. ஜீன் ஜக் ரூஸோவினால் (Jean – Jacques Rousseau) முன்மொழியப்பட்ட **மூன்று** (03) கொள்கைகளைப் பெயரிட்டு, இக் கொள்கைகள் உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியர்களுக்கு எவ்வாறு உதவும் என்பதை ஆராய்க.
7. விசேட கல்வி அலகுகளில் விழுமியக் கல்வியை அறிமுகப்படுத்துவதில் எதிர்கொள்ளும் **ஐந்து** (05) சவால்களை அடையாளப்படுத்துக.
8. தற்போதைய இலங்கைக் கல்வி முறைமையில் உள்ளடங்கற் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கு இடையூறாக அமையும் **ஐந்து** (05) சவால்களைச் சுருக்கமாக விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. **i.** இலங்கையில் உள்ள ஒருங்கிணைந்த கல்வி முறையில் இடமளிக்கப்பட்டுள்ள இயலாமைகளையுடைய மாணவர்களின் வகைகளை விளக்குக.

   **(04 புள்ளிகள்)**

   **ii.** ராவ் மற்றும் பலர் (Reo et al.) முன்மொழிந்த விசேட கல்வியின் ஏழு (07) கொள்கைகளை விவரிக்குக.

   **(06 புள்ளிகள்)**

**iii.** ராவ் மற்றும் பலரின் ஏழு (07) விசேட கல்விக் கொள்கைகளை இலங்கைக் கல்வி முறைமையில் நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளக் கூடிய சவால்களைப் பற்றி ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

**10. i.** ஜோன் டீவியின் கல்வித் தத்துவத்தின் முக்கிய கொள்கைகளை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** இயலாமைகள் உள்ள மாணவர்களுக்கான கற்பித்தல் மற்றும் செயல்முறைக்கு உதவும் வகையில் இக் கொள்கைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** ஜோன் டீவியின் கொள்கைகளைச் செயல்படுத்தும் போது உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியராக நீங்கள் சந்திக்கும் சவால்களைப் பற்றி ஆராய்ந்து உங்கள் பதிலுக்கான எடுத்துக்காட்டுக்களையும் முன்வைக்குக.

**(09 புள்ளிகள்)**

**11. i.** இயலாமைகள் உள்ள மாணவர்களுக்குக் கற்பிப்பதில் கல்வித் தத்துவங்கள் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் ஆராய்க.

**(05 புள்ளிகள்)**

**ii.** தோமாசெவ்ஸ்கியினால் (Tomaszewski) (2004) முக்கிய கல்விக் கொள்கைகளாக அடையாளம் காணப்பட்ட **மூன்று (03)** உரிமைகள் சார்ந்த அணுகுமுறைகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** "உள்ளடங்கல் ஒரு இடம் அல்லது ஒரு நிகழ்ச்சித்திட்டம் அல்ல, ஆனால் ஒரு கருத்தியல்." இக்கூற்றினை எடுத்துக்காட்டுக்களின் உதவியுடன் விமர்சன ரீதியாக ஆராய்க.

**(09 புள்ளிகள்)**

**12. i.** பிளேட்டோ அறிமுகப்படுத்திய கல்வித்திட்டத்தை அவரது முக்கிய தத்துவங்களை முன்னிலைப்படுத்தி விவரிக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** இலங்கையில் இயலாமைகளையுடைய மாணவர்களை வலுவூட்டுவதில் வாழ்நாள் நீடித்த கல்வி என்ற தத்துவத்தின் முக்கியத்துவத்தை பொருத்தமான எடுத்துக்காட்டுக்கள் அல்லது விவரங்களுடன் விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறைகளில் புலன் சார் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்குத் திறம்பட உதவுவதற்கு ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய உத்திகளை முன்மொழிக, உங்கள் பதிலை விளக்குவதற்கு நடைமுறை உதாரணங்களை முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**

**13. i.** இலங்கைச் சூழலில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட சிறுவர்களுக்கான முறைசாராக் கல்வியின் முக்கியத்துவத்தினை ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**ii.** மகாத்மா காந்தி மற்றும் கார்ஸ் மார்க்ஸ் ஆகியோரால் முன்மொழியப்பட்ட தொழிற்கல்விக் கொள்கைகளை, குறிப்பாக இயலாமைகள் உள்ள மாணவர்களுடன் தொடர்புபட்ட வகையில் ஒப்பிட்டாராய்க.

**(07 புள்ளிகள்)**

**iii.** பயனுள்ள தொழிற்கல்வி நடைமுறைகளை முன்னெடுப்பதில் இலங்கைக் கல்விமுறை எதிர்கொள்ளும் முக்கிய சவால்களை அடையாளப்படுத்தி விளக்குக.

**(07 புள்ளிகள்)**



20

**14. i.** விழுமியக் கல்வி எனும் எண்ணக்கருவை வரையறுத்துப் பொருத்தமான உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** விசேட தேவைகள் சார் கல்வித் துறையில் விழுமியக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பில் ஆராய்க.

**(07 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியராக, உள்ளடங்கற் கல்வியில் முக்கிய பங்குதாரர்களிடையே விழுமியக் கல்வியை மேம்படுத்துவதற்கான உத்திகளை கோடிட்டுக் காட்டுக.

**(08 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*



21